### அனைத்துத் துறைகளிலும் ‘திராவிட மாடல்’ அரசு வெல்லும்!

# முதல்வரின் பொற்கரங்களில் தமிழ்நாட்டின் செங்கோல் என்றும் நிரந்தரமாக இருக்கும்!

## சட்டப்பேரவையில் - ஆவடி சா.மு. நாசர் பேச்சு!

*சென்னை, பிப்.15-*

**சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் ஆளுநர் உரை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய ஆவடி தொகுதி கழக உறுப்பினர் சா.முநாசர், “அனைத்துத் துறைகளிலும் திராவிட மாடல் அரசு வெல்லும்! வெல்லும்!” என்றும், “முதல்வரின் பொற்கரங்களில் தமிழ்நாட்டின் செங்கோல் என்றும் நிரந்தரமாக இருக்கும்!” என்றும் குறிப்பிட்டார்.**

**சட்டப்பேரவையில் ஆவடி சா.மு. நாசர் பேசியதாவது:-**

**இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு!**

கடந்த 2 ½ ஆண்டுகளில் புதுமை பெண் திட்டம், விடியல் பயண திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம், முதல்வர் காலை சிற்றுண்டி திட்டம், இல்லம் தேடி கல்வி திட்டம், மக்களை தேடி மருத்துவ திட்டம், கொரோனா நிவாரண நிதி 4000, மிக்ஜாம் பேரிடர் நிவாரண நிதி ரூ.6000, சுய உதவி குழுக்களுக்கு ரூபாய் 30,000 கோடி கடன், உலக முதலீட்டாளர் மாநாடு மூலம் ரூபாய் 6.64 லட்சம் கோடி ஈர்த்தது. நான் முதல்வன் திட்டம் இது போன்ற பல்வேறு திட்டங்களை வழங்கி உள்ளார் திராவிட நாயகன் தமிழக முதல்வர் அவர்கள்.

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும். என்பதற்கு உதாரணமாக

கல்லினுள் சிறு தேரைக்கும்,

கருப்பை அண்டத்து உயிர்க்கும்

புல்உணவு அளித்துக் காக்கும்,

புண்ணியன் தன்னை கைவிடமாட்டான்

என்ற நம்பிக்கையில் அரிய வகை முகசிதைவு நோயால் பாதிக்கப்பட்ட 9 வயது சிறுமி தானியா 23.08.2022 அறுவை சிகிச்சை நடைபெற்று நன்றாக உள்ளார்.

நரிக்குறவர் குடியிருப்பை சேர்ந்த பள்ளி மாணவிகள் திவ்யா, தர்ஷினி, மற்றும் பிரியா, ஆட்சிக்கு முன் 2004 - சுனாமி பேரிடரிலும், கொரோனா முதல் அலையின் போதும் தமிழக மக்களைக் காத்தவர் முதல்வர் ஆட்சிக்கு பின் கொரோனா இரண்டாம் அலையிலும், மிக்ஜாம் புயல் பேரிடரிலும் (சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் 63 செ.மீ மழை) (தூத்துக்குடியில் 105 செ.மீ மழை)

சிறுமி தானிய: கல்லினுள் சிறு தேரைக்கும், கருப்பை அண்டத்து உயிர்க்கும்

தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் எனக்கு உடனே தொலைபேசியில் அழைத்து சிறுமி தான்யாவிற்கு தேவையான உதவிகளை செய்துதருமாறும், மேல் சிகிச்சைக்காக அழைத்து செல்லவும் கட்டளையிட்டார்கள், அதன்படி 23.08.2022 அன்று காலை தமிழ்நாடு முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் முதற்கட்ட அறுவை சிகிச்சை நடைபெற்றது.

அதேபோல் நரிக்குறவர் குடியிருப்பை சேர்ந்த பள்ளி மாணவிகள் திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகியோர், நரிக்குறவர் இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அரசு பள்ளி உள்பட பல இடங்களில் புறக்கணிக்கபடுவதாக சமூக வலைத்தளம் மூலம் பேசிய வீடியோ காட்சி கண்டு. முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், மாணவிகள் திவ்யா, பிரியா, தர்ஷினி ஆகியோரை தலைமை செயலகம் அழைத்து நேரில் சந்தித்தார், பின்னர் என்னை அழைத்து அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய கட்டளையிட்டார்கள்.

அவர் உத்தரவை அடுத்து அவர்களை நேரில் சென்று சந்தித்து ஆய்வு நடத்தினேன் அப்போது வீடியோ காலில் வந்த முதலவர் அவர்கள், அந்த பெண்களிடம் உரையாடினார், மேலும் நேரில் வருவதாகவும் உறுதி அளித்தார்,

அதேபோல் அந்த நரிக்குறவர் குடியிருப்பில் சாலைகள், கழிப்பறை வசிதகள், விளக்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் ரூபாய் 36 லட்சம் மதிப்பில் மேம்படுதபட்டன, அவர்களுக்கு இலவச பட்டாவும் வழங்கப்பட்டது, மேலும் அம் மாணவிகளுக்கு கல்வி கட்டணம் இல்லாமல் கல்வி தொடர நடவடிக்கை எடுக்கப்பட்டது, அதுமட்டும் அல்லாமல் 14.04.2022 அன்று முதல்வர் அவர்களே நேரில் சென்று அவர்களுடன் இணைந்து உணவு அருந்தி ஆய்வு மேற்கொண்டார்,

விளிம்புநிலையில் உள்ள மக்கள் அரசை தேடிவர தேவையில்லை, நாங்களே தேடிவந்து உதவிகளை செய்யும் அரசாக என்னுடைய அரசு இருக்கும், இது விளிம்பு நிலை மக்களுக்கான அரசு, ஆகவேதான் அவர்களை ஒவ்வொரு குடும்பமாக தேடி, ஒவ்வொரு அடிப்படை தேவைகளை முன்னுரிமை கொடுத்து நிறைவேற்று வருகிறார் நம் திராவிட மாடல் நாயகன் முதல்வர் அவர்கள்,



35 ஆண்டுகளுக்கு முன்னர் நம் உயிரினும் மேலான தலைவர் கலைஞர் அவர்கள் ஜப்பான் சென்றபோது கண்ட காட்சியை விவரிக்கிறார்,

ஜப்பானில் ஒரு தாய் பூகம்பம் நிகழும்போது தன் குழந்தையுடன் சாலையில் செல்கிறாள், திடீரென பூகம்பம் ஏற்பட்டு சாலை இரண்டாக பிளக்கிறது, அந்த தாய் அந்த பிளவிற்குள்ளே புதைகிறாள் அடுத்த நொடி சாலை மூடுகிறது, ஆனால் அந்த தாயின் கை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு இருக்கிறது, மரித்துப்போன அவள் கைகளிலே அவளது குழந்தை மட்டும் உயரோடு இருக்கிறது. தான் மரித்தாலும் தன் குழந்தை இந்த உலகில் சந்தோசமாக இருக்கவேண்டும் என்ற தாயுள்ளம் கொண்ட நம் தலைவர் அண்ணன் தளபதி அவர்கள்

கொரானா தொற்றின் பொது உலக தலைவர்களுக்கு உதாரணமாக PPE கிட் அணிந்து கொரோனா தொற்றில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று அறுதல் கூறி ஆய்வும் நடத்தினார்,

அதேபோல் எதிர்பாரா மழை பேரிடரின் போதும் கம்பூட் அணிந்து நேரில் சென்று பாதிப்புகளை ஆய்வு செய்து, போர்க்கால அடிப்படையில் மீட்பு நடவடிக்கைகளை எடுத்தார்,

அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகிய கொள்கைகளை பின்பற்றுவதில் தமிழக முதல்வர் அவர்களின் அரசு உறுதியாக உள்ளது.

**குஜராத் பூகம்பம்**

26 சனவரி 2001 அன்று, இந்தியாவின் 52ஆவது குடியரசு நாளன்று, குஜராத் மாநிலத்தில், கட்ச் மாவட்டத்தில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் 20,023 பேர் பலியாயினர். 1,67,000 பேர் படுகாயம் அடைந்தனர். 4,00,000 இலட்சம் வீடுகள் தரைமட்டம் ஆயின, குஜராத் அரசு உதவிகரம் கேட்டு கெஞ்சியது. அப்போது யாருமே முன்வராத பொது முதல் மாநிலமாக நம் தமிழக முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் உதவி செய்தார்.

இதை 2001-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல்வராக பதவியேற்ற அப்போதைய குஜராத் முதல்வர் நரேந்திர மோடி அவர்கள், குஜராத் சட்டசபையில் கண்ணீர்மல்க கலைஞர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

ஆனால் தற்போது தமிழ்நாடு பெருமழை பேரிடரால் தவிக்கும் பொது நமக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய நிவாரண நிதியை கூட அளிக்காமல் வஞ்சனை செய்கிறது, நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய அரசு.

இந்த கடுமையான நிதி நெருக்கடியிலும் ரூபாய் 1487 கோடி ரூபாய் ஒதுக்கி பாதிக்கப்பட்ட 24.25 லட்சம் குடும்பங்களுக்கு தமிழக முதல்வர் தலா ரூபாய் 6000 வழங்கினார்.

நன்றி உரை:

இந்த அரசு ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் இது “எங்களின் அரசு” என்று வாக்களித்தவர்களும், வாக்களிக்காதவர்களும் போற்றும் வகையில், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையும், பேரறிஞர் அண்ணாவின் நிர்வாகத் திறமையும், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கொள்கை லட்சியமும் ஒரு சேர வாய்க்கப் பெற்ற தலைவராக விளங்கும் நமது தமிழக முதல்வரின் பொற்கரங்களில் தமிழ்நாட்டின் செங்கோல் என்றும் நிரந்தரமாக இருக்கும்.

அதன் வழியே தமிழ் வாழும், அனைத்து துறைகளிலும் இந்த திராவிட மாடல் அரசு வெல்லும்! வெல்லும்! வெல்லும்!

இந்த ஆளுநர் உரையின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த முதல்வர் தளபதி அவர்களுக்கு என்னுடைய நன்றியை வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்

### தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்திற்கு

# கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகை!

### மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ. வேண்டுகோள்!







*தஞ்சாவூர், பிப்.15-*

தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்திற்கு கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு வருகைத் தர உள்ளதால் அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொள்ள வைப்பது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ - கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ ஆகியோர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்களது அறிக்கை வருமாறு : தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத்தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவுரையின்படி, 2024ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கழக துணை பொதுச்செயலாளர், நாடாளுமன்ற கழக குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி, தலைமையில் டி.கே.எஸ். இளங்கோவன், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழநிவேல் தியாகராஜன், தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி, எம்.எம்.அப்துல்லா எம்.பி, சென்னை மேயர் பிரியா உள்ளிட்ட குழுவினர் நாளை (16ஆம்தேதி - வெள்ளிக்கிழமை) மாலை 9 மணிக்கு தஞ்சை - நாகை சாலையில் உள்ள குருதையாள் சர்மா திருமண மண்டபத்தில் பல்வேறு தரப்பினரை சந்தித்து தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய திட்டங்கள் குறித்து கோரிக்கை மனுக்களை பெற உள்ளனர்.

அதுசமயம் தஞ்சை வடக்கு - மத்திய - தெற்கு மாவட்டத்தை சேர்ந்த தொழில்துறையினர், வியபாரிகள், கல்வியாளர்கள், விவசாயிகள், சிறுகுறு தொழில் முனைவோர், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், ஒன்றிய அரசின் துறைகளின் வளர்ச்சியில் ஆர்வமுள்ள சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொது மக்கள் மற்றும் கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டு தங்களது கருத்துகளை மனுக்களாக வழங்கிட ஏதுவாக மேற்கண்ட அனைவருக்கும் தகவல் தெரிவித்து அவர்களை தஞ்சைக்கு அழைத்து வர உரிய ஏற்பாடுகளை அந்தந்த மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் செயலாளர்கள் செய்ய கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி - துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. - கா. அண்ணாதுரை எம்.எல்.ஏ. அறிக்கை விடுத்துள்ளனர்.



சென்னை, சேப்பாக்கம், அரசு விருந்தினர் மாளிகை அருகில் நேற்று முன்தினம் (13.02.2024) போக்குவரத்துத் துறை இயக்க ஊர்தி சார்பில் நடைபெற்ற “தேசிய சாலை பாதுகாப்பு மாதம் 2024” (National Road Safety Month 2024) முன்னிட்டு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நடைப்பயணத்தை (Road Safety Awareness Walkathon) கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு துறை ஆணையர் அ.சண்முகசுந்தரம், சாலைப் பாதுகாப்பு காவல் துறை துணை தலைவர் திருமதி எஸ்.மல்லிகா மற்றும் போக்குவரத்துத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ‘சமூக நீதி’ என்ற சொல்லை உச்சரிக்கக்கூட மனமில்லாதவர்களுக்கு

# உரிமையியல் நீதிபதி தேர்வில் ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் தமிழ்நாடு சொல்லும் பதில்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை,பிப்.15-

ஜவ்வாதுமலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதி அவர்கள் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றிபெற்றதையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாதுமலையை அடுத்த புலியூர் கிராமத்தைச் சேர்ந்த திருமதி ஸ்ரீபதி அவர்கள் 23 வயதில் உரிமையியல் நீதிபதி தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்!

பெரிய வசதிகள் இல்லாத மலைக்கிராமத்தைச் சேர்ந்த பழங்குடியினப் பெண் ஒருவர் இளம் வயதில் இந்நிலையை எட்டியிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதுவும் நமது திராவிட மாடல் அரசு தமிழ்வழியில் படித்தவர்களுக்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை எனக் கொண்டு வந்த அரசாணையின் வழியே ஸ்ரீபதி நீதிபதியாகத் தேர்வாகியுள்ளார் என்பதை அறிந்து பெருமை கொள்கிறேன். அவரது வெற்றிக்கு உறுதுணையாக நின்ற அவரது தாய்க்கும் கணவருக்கும் எனது பாராட்டுகள்!

சமூகநீதி என்ற சொல்லை உச்சரிக்கக் கூட மனமில்லாமல் தமிழ்நாட்டில் வளைய வரும் சிலருக்கு ஸ்ரீபதி போன்றோரின் வெற்றிதான் தமிழ்நாடு தரும் பதில்!

**“நெடுந்தமிழ் நாடெனும் செல்வி, நல்ல**
**நிலை காண வைத்திடும்; பெண்களின் கல்வி!**
**பெற்றநல் தந்தை தாய் மாரே, நும்**
**பெண்களைக் கற்க வைப் பீரே!**
**இற்றைநாள் பெண் கல்வி யாலே, முன்**
**னேற வேண்டும் வையம் மேலே!”**




இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில்

# ரூ.1.37 கோடியில் புதிய திட்டப்பணிகள் - முடிவுற்றப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*பெரம்பலூர், பிப்.15-*

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி க.கற்பகம் தலைமையில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.

பெரம்பலூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில், சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பெரம்பலூர் நகரம், துறையூர் சாலையில் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் சாலையில் நடுவே மின்விளக்குகள் பொருத்தும் பணி, பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் ரூ.21 லட்சம் மதிப்பீட்டில் புதிய இ-சேவை மையம் கட்டடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.61 லட்சம் மதிப்பீட்டில் 02 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலகத்தில் புதிய இ-சேவை மையம், சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் துறைமங்கலம் 7வது வார்டு ராஜா நகர் 2வது குறுக்குத் தெருவில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக் கடை, வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வாலிகண்டபுரம் ஊராட்சியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட புதிய சிமெண்ட் சாலை, தேவையூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டடம், கிருஷ்ணாபுரம் ஊராட்சியில் கட்டப்பட்டுள்ள நியாய விலைக் கடை, அரும்பாவூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.26 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட இரண்டு வகுப்பறை கட்டடம் என ரூ.76 லட்சம் மதிப்பீட்டில் 06 பணிகள் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களை பொது மக்கள் முறையாக, முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

அதனைத்தொடர்ந்து, பெரம்பலூர் முதல் எசனை கிருஷ்ணாபுரம் வழியாக வீரகனூர் வரை செல்லும் பொதுமக்கள் எளிதில் சென்று வரும் வகையில் தினசரி 4 நடைகள் கூடுதல் புதிய பேருந்து சேவையினையும், பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அன்னமங்கலம் ஊராட்சியில் உள்ள பூம்புகார் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில், காலை 7 மணிக்கு பெரம்பலூர் முதல் பிள்ளையார் பாளையம் வரை செல்லும் பேருந்து (பேருந்து எண்.11A) பூம்புகார் வரையிலும், மாலை 4.40 மணிக்கு பெரம்பலூர் முதல் அன்னமங்கலம் வரை செல்லும் பேருந்து (பேருந்து எண்.11B) பூம்புகார் வரையிலும், மாலை 5:35 மணிக்கு அன்னமங்கலம் முதல் பெரம்பலூர் வரை செல்லும் பேருந்து (பேருந்து எண்.11B) பூம்புகார் வரையிலும் சென்று வரும் வகையில் கூடுதல் பேருந்து வசதியும் பாண்டகபாடி கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் காலை 9 மணிக்கு மாவிலிங்கை முதல் எசனை வழியாக பெரம்பலூர் செல்லும் பேருந்து (பேருந்து எண்.14B) பாண்டகபாடி வரை சென்று வரும் வகையில் கூடுதல் பேருந்து வசதியினையும் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வி.எஸ்.பெரியசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன்,

பொதுக்குழு உறுப்பினர்கள் செ.அண்ணாதுரை, பட்டுச்செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் நூருல் ஹிதா இஸ்மாயில்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன்,

ஒன்றிய செயலாளர்கள் என்.கிருஷ்ணமூர்த்தி, வீ.ஜெகதீசன், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய பொறுப்பாளர் டாக்டர் செ.வல்லபன், பேரூர் செயலாளர்கள் வெங்கடேசன், ஆர்.ரவிச்சந்திரன், செல்வலெட்சுமி சேகர்,

ஜாகிர்உசேன், நகர்மன்ற தலைவர் அம்பிகா ராஜேந்திரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் க.ராமலிங்கம், துணைத் தலைவர் எம்.ரெங்கராஜ், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர்கள் தழுதாழை பாஸ்கர், மருத்துவர் அ.கருணாநிதி, மகாதேவி ஜெயபால், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (கும்பகோணம்) லிட் மேலாண் இயக்குநர் மகேந்திர குமார், பொது மேலாளர் சக்திவேல், நகர்மன்ற துணைத்தலைவர் து.ஹரிபாஸ்கர், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வ.சுப்ரமணியன், டி.ஆர். சிவசங்கர்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட

# தி.மு.க. அவசரச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம். நாளை (16.02.2024 வெள்ளிக்கிழமை) காலை 10.00 மணியளவில் வாலாஜாபாத் காஞ்சிபுரம் சாலையில் அறம் வளர்த்த நாயகி திருமண மண்டபத்தில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனியரசு. தலைமையிலும் மாவட்ட துணைச் செயலாளர்கள் க.செல்வம் எம்.பி.. டி.வி. கோகுலகண்ணன, கு.மலர்விழி, மாவட்டப் பொருளாளர் சன்பிராண்ட் கே.ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது,

எனவே இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர், தொகுதிப் பொறுப்பாளர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகச் செயலாளர்கள், மாநில - மாவட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்,

பொருள், கழக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, 18.02.2024 அன்று காஞ்சிபுரத்தில் “உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்” என்ற தலைப்பில் அமைச்சர் எ.வ.வேலு பங்கேற்கும் பிரமாண்டமான பொதுக்கூட்டம், நாடாளுமன்ற தேர்தல் பணி, கழக ஆக்கப் பணிகள்,

**க.சுந்தர்** எம்.எல்.ஏ.,
செயலாளர் - காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.